பக்கங்கள் 15+3

மாலை முரசு

முழக்கம்: 03 | வள்ளுவ ஆண்டு 2057 | கார்த்திகை 18 வெள்ளிக்கிழமை 05.12.2025 | அதிர்வு 128


## 13 மாவட்டங்களுக்கு மண்சரிவு எச்சரிக்கை

இலங்கையில் 13 மாவட்டங்களுக்கு மண்சரிவு அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

அதன்படி, பதுளை, கொழும்பு, கம்பஹா, களுத்துறை, காலி, 02

'கனடா முரசு' இணைக்கப்பட்டுள்ளது

இங்கே CLICK செய்யவும்



# எந்த அரசு ஆட்சியில் இருந்தாலும் அனர்த்தத்தைத் தடுக்க முடியாது!

## வழக்குத் தொடரும் எதிரணியின் நடவடிக்கை அபத்தமானது என்றும் பொன்சேகா விசனம்

இலங்கையில் கடந்த நாட்களில் நிலவிய அதிதீவிர கால நிலையைத் தடுப்பதற்குத் தவறியதற்காக அரசாங்கத்தின் மீது வழக்குத் தொடரும் எதிர்க்கட்சியின் நடவடிக்கை அபத்தமானது என முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா தெரிவித்துள்ளார்.

கடந்த ஆட்சி காலங்களின் போதும், இது போன்ற நிலைமை ஏற்பட்டிருந்தது எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். 02

# யாழ். பழைய பூங்காவில் உள்ளக அரங்கு அமைப்பதற்கு எதிராக இடைக்காலத் தடை

(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம் பழைய பூங்காவுக்கு மத்தியில் உள்ளக விளையாட்டு அரங்கு அமைத்தல் என்பது உட்பட அங்கு அபிவிருத்திப் பணிகள் என்ற பெயரில் மேற்கொள்ளப்படும் சகல நடவடிக்கைகளுக்கும் எதிராக யாழ். மாவட்ட நீதிமன்றம் இன்று இடைக்காலக் கட்டாணை ஒன்றை வழங்கியிருக்கின்றது.

கிருஷ்ணவேணி சிறிதரன் என்ற மனுதாரர் சார்பில் தாக்கல் செய்யப்பட்ட



மனுவை ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் இன்று நீதிமன்றத்தில் சமர்ப்பித்து முன்வைத்த வாதங்களின் அடிப்படையில் இந்தக் கட்டாணையை யாழ். மாவட்ட நீதிபதி சிவகுமார் பிறப்பித்துள்ளார்.

19ஆம் நூற்றாண்டில் அப்போதைய யாழ். அரச அதிபராக இருந்த டைக் பேர்சிவல் என்பவர் தமது சொந்தக் காணியான இந்தப் பிரதேசத்தை பொதுச்சொத்தாகப் பயன்பட எழுதி வைத்திருந்தார். இது தொடர்பில் நம்பிக்கை நிதியம் ஒன்றும் உருவாக்கப்பட்டிருந்தது.

இந்தப் பொதுச் சொத்தை பாதுகாக்கும் விடயத்தில் தவறிழைத்து. 02

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்-Bonding Tamils Globally

# யாழ்ப்பாணம் மாநகர சபையின் 'பட்ஜட்' இரு மேலதிக வாக்குகளால் நிறைவேற்றம்

(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம் மாநகர சபையின் 2026 ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டம் இன்று 2 மேலதிக வாக்குகளால் நிறைவேற்றப்பட்டது.

வரவு - செலவுத் திட்டம் இன்று யாழ். மாநகர சபையின் சபா மண டபத்தில் மேயர் வி.மதிவதனியால் சபை அங்கீகாரத்துக்காகச் சமர்ப்பிக் கப்பட்டு விவாதிக்கப்பட்டது.

விவாதத்தின் பின்னர் வரவு - செலவுத் திட்டம் சபை அங்கீகாரத்துக்கு




விடப்பட்டது. இதன்போது ஆதரவாக 23 வாக்குகளும், எதிராக 21 வாக்கு களும் அளிக்கப்பட்டதன் அடிப்படை யில் பட்ஜட் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

இதன்போது இலங்கைத் தமிழரசுக் கட்சியின் 13 உறுப்பினர்களும், ஜன நாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணி மற்றும் ஈ.பி.டி.பியின் தலா 4 உறுப்பி னர்களும், ஐக்கிய மக்கள் சக்தி மற்றும் ஐக்கிய தேசியக் கட்சியின் தலா ஓர் உறுப்பினர்களும் என 23 உறுப்பி னர்கள் ஆதரவாக வாக்களித்தனர்.

தேசிய மக்கள் சக்தியின் 10 உறுப்பி னர்களும், அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸின் 11 உறுப்பினர்களுமாக 21 உறுப்பினர்கள் பட்ஜட்டை எதிர்த்து வாக்களித்தனர்.

# விமான நிலையத்தில் குழந்தையை பெற்றெடுத்த வெளிநாட்டுப் பெண்

கட்டுநாயக்க விமான நிலையத் தில் தான்சானிய நாட்டைச் சேர்ந்த 29 வயதான பெண் ஒருவர் இன்று குழந்தை யைப் பிரசவித்தார்.

மேற்படி பெண் இன்று காலை டுபாயில் இருந்து கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்துக்கு வந்தடைந்து, மலேசியா, கோலாலம்பூருக்கு புறப்படுவதற்காக விமான நிலையப் போக்குவரத்து முனை யத்தில் காத்திருந்தார்.

இதன்போது, பிரசவ வழி ஏற்பட்டதால் உடனடியாக விமான நிலைய மருத்துவ சிகிச்சை மையத்துக்கு அழைத்துச் செல்லப்பட்டார்.

அங்கு வைத்தியர்கள் மற்றும் தாதி யர்களின் உதவியுடன் அவர் ஆண் குழந்தை ஒன்றைப் பிரசவித்தார்.

பின்னர் அந்தப் பெண்ணும் குழந் தையும் மேலதிக சிகிச்சைக்காக கட்டு நாயக்க விமான நிலையத்தில் இருந்து அம்புலன்ஸ் மூலம் நீர்கொழும்பு பொது வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டனர்.

## முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

### யாழ். பழைய...

நம்பிக்கை நிதியப் பூங்காவை அழித்து, உள்ளக விளையாட்டு அரங்கு ஒன்றை அமைக்க முற்படுகின்றனர் எனச் சட் டத்தரணி லிஸ் லேவிதாவின் அனு சரணையுடன் முன்னிலையான ஜனாதி பதி சட்டத்தரணி எம்.ஏ. சுமந்திரன் வாதங்களைச் சமர்ப்பித்தார்.

சட்டத்தரணிகள் பிரபாகரன், சிந்துஜன் ஆகியோரும் அவருக்கு உதவியாளராக முன்னிலையாகி இருந்தனர்.

ஏற்கனவே யாழ்ப்பாணத்தில் செம் மணி, அல்லைப்பிட்டி, மண்டைதீவு ஆகிய பகுதிகளில் இத்தகைய உள்ளக விளை யாட்டு அரங்குகளை நிறுவுவதற்கான விரிவான அறிக்கைகளை நகர அபி விருத்தி அதிகார சபை சமர்ப்பித் திருக்கும் நிலையில், அவற்றைப் புறக் கணித்து, இந்த நம்பிக்கை நிதியச் சொத்தை அழித்து, அதன் நோக்கத் தைப் பாழாக்கி, இந்த உள்ளக விளை யாட்டு அரங்கை அமைக்க நடவ டிக்கை எடுக்கப்பட்டிருப்பதாக மனுதாரர் சார்பில் முன்னிலையான சட்டத்தரணி சுமந்திரன் மன்றுக்குத் தெரிவித்தார்.

1990 - 1995 ஆம் ஆண்டு காலப் பகுதியில் குடாநாடு விடுதலைப்புலி களின் கட்டுப்பாட்டில் இருந்தபோது கூட இந்தப் பூங்காவைக் கட்டிக் காப்பதில் அவர்கள் அதீத சிரத்தை எடுத்தார்கள் என்பதையும் மனுதாரரின் சட்டத்தரணி மன்றுக்குச் சுட்டிக்காட்டி இருந்தார்.

அவரின் வாதத்தை ஏற்றுக்கொண்டு, மேற்படி பூங்காவில் அபிவிருத்தி நட வடிக்கைகள் என்ற பெயரில் முன் னெடுக்கப்படும் சகல செயற்பாடுக ளையும் இடைநிறுத்துவதற்கு இரண்டு வார கால கட்டளையைப் பிறப்பித்த நீதி மன்றம், அதுவரை வழக்கை ஒத்தி வைத்து தரப்புகளுக்கு அழைப்பாணை பிறப்பிக்க உத்தரவிட்டது.

நம்பிக்கை நிதிய விவகாரம் என்பதால் குடியியல் நடவடிக்கை சட்ட கோவையின் 16ஆம் பிரிவின் கீழ் இந்த விடயத்தில் சம்பந்தப்பட்ட எவரும் தங்களையும் இடையீட்டுத் தரப்புகளாகச் சேர்க்க விரும்பின் அதற்கு விண்ணப்பிக்க லாம் என்று தெரிவிக்கும் அறிவுறுத் தலை நீதிமன்றம் விடுக்கும் என எதிர் பார்க்கப்படுகின்றது.

### 13 மாவட்டங்களுக்கு...

மாத்தறை, கண்டி, மாத்தளை, நுவ ரெலியா, குருநாகல், கேகாலை, மொனராகலை மற்றும் இரத்தினபுரி ஆகிய மாவட்டங்களுக்கு விடுக்கப் பட்டுள்ள மண்சரிவு அபாய எச்சரிக்கை 24 மணித்தியாலங்களுக்கு நீடிக்கப் பட்டுள்ளது.

தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவகம் வெளியிட்டுள்ள பிந்திய அறிக்கையி லேயே மண்சரிவு தொடர்பாக இந்த எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையின் பிரகாரம், கண்டி, குருநாகல், கேகாலை மற்றும் மாத்தளை, மாவட்டங்களுக்கு மூன்றாம் நிலை சிவப்பு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

அத்துடன், பதுளை, நுவரெலிய மற் றும் இரத்தினபுரி மாவட்டங்களுக்கு இரண் டாம் நிலை செம்மஞ்சள் எச்சரிக்கை யும், கொழும்பு, காலி, கம்பஹா, களுத் துறை, மாத்தறை மற்றும் மொனராகலை ஆகிய மாவட்டங்களுக்கு முதலாம் நிலை எச்சரிக்கையும் விடுக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, இன்றும் நாட்டின் சில பகுதிகளில் மழை பெய்யக்கூடும் என அறிவிக்கப்பட்டுள்ளது. வடக்கு, வட மத்திய, கிழக்கு மற்றும் ஊவா மாகா ணத்தின் சில பகுதிகளிலும், மாத்தளை மாவட்டத்திலும் மழை பெய்யக்கூடும் என வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வு கூறியுள்ளது.

மேல் மற்றும் சப்ரகமுவ மாகாணங்க ளிலும், காலி, மாத்தறை மாவட்டங்க ளிலும் சுமார் 75 மில்லிமீற்றர் வரையான ஓரளவு பலத்த மழைவீழ்ச்சி பதிவாகக் கூடும் எனவும் எதிர்வு கூறப்பட்டுள்ளது.

### எந்த அரசு...

எந்த அரசாங்கம் ஆட்சியில் இருந்தா லும் இது போன்ற அனர்த்தம் ஏற்படக் கூடும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

கடந்த கால ஆட்சியாளர்கள் ஆட்சி யில் இருந்திருந்தாலும் கூட இது போன்ற அனர்த்தங்கள் ஏற்பட்டிருக்க கூடும் எனவும் அவர் கூறியுள்ளார்.

இலங்கையில் வளங்கள், உப கரணங்கள் மற்றும் மனித வளங்கள் குறைவாக இருப்பதால் யாராலும் இந்த நிலைமையைத் தடுத்திருக்க முடி யாது எனவும் அவர் மேலும் தெரிவித் துள்ளார்.

# வெள்ளப் பேரிடர் குறித்து ஆராய்வதற்கு நாடாளுமன்றத் தெரிவுக்குழு வேண்டும்

## ஐக்கிய மக்கள் சக்தி வலியுறுத்து

இலங்கையில் ஏற்பட்ட வெள்ளப் பேரிடர் தொடர்பில் ஆராய்வதற்காக நாடாளுமன்றத் தெரிவுக்குழுவை அமைக்குமாறு பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி வலியுறுத்தியுள்ளது.

அந்தக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் முஜிபூர் ரஹ்மான், நாடாளுமன்றத்தில் உரையாற்றும்போது இதனை வலியுறுத்தியுள்ளார்.

அவர் மேலும் உரையாற்றுகையில், "காலநிலையால் இலங்கையில் ஏற்பட்டுள்ள அழிவுகள் தொடர்பில் நாடாளுமன்றம் ஆராய்வது அவசியம். எனவே, விசேட தெரிவுக்குழுவொன்றை அமைக்க வேண்டும்.



இலங்கையில் சீரற்ற காலநிலை நிலவும் என வெள்ளப் பேரிடர் ஏற்படுவதற்கு சில நாள்களுக்கு முன்னர் அரசாங்கத்துக்கு அறிவுறுத்தல் வழங்கப்பட்டிருந்தது. எனவே, அந்த அறிவுறுதல்களுக்கு அமைய அரசாங்கம் எத்தகைய நடவடிக்கை எடுத்தது என ஆராய்வது மிகவும் அவசியம். ஆனால், எந்தப் பதிலையும் வழங்காமல் மௌனமாக உள்ளது.

புயல் உள்ளிட்ட இயற்கை இடர்களைத் தடுத்து நிறுத்த முடியாது. ஆனால், பாதிப்புக்களைக் குறைக்க முடியும். எனினும், டித்வா புயலால் ஏற்படும் பாதிப்புக்களைத் தவிர்க்க அரசாங்கம் நடவடிக்கை எடுத்ததாகத் தெரியவில்லை." – என்றார்.

# சர்வதேச நன்கொடையாளர்கள் மாநாட்டை உடனடியாக நடத்த நடவடிக்கை எடுங்கள்!

## அரசிடம் பிரதான எதிர்க்கட்சி வேண்டுகோள்



"இயற்கைப் பேரிடரால் மோசமாகப் பாதிக்கப்பட்ட இலங்கையை மீட்பதற்குச் சர்வதேச உதவி அவசியம். எனவே, சர்வதேச நன்கொடையாளர்கள் மாநாட்டை உடன் நடத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்." – என்று பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி வலியுறுத்தியுள்ளது.

கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடக சந்திப்பின்போதே நாடாளுமன்ற உறுப்பினரும் ஐக்கிய மக்கள் சக்தியின் பேச்சாளருமான எஸ்.எம். மரிக்கார் மேற்கண்டவாறு வலியுறுத்தியுள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு:-

"இலங்கையானது நாட்டு மக்களுக்குச் சொந்தமானது. மாறாக ஆட்சியாளர்களுக்கு அல்ல என்பதைப் புரிந்துகொள்ள வேண்டும். ஆட்சியாளர்களுக்கு நாட்டை ஆள்வதற்குரிய தற்காலிக அதிகாரமே வழங்கப்படுகின்றது.

தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்துக்கு போதுமானளவு அனுபவம் இல்லை. எனவே, அனுபவம் உள்ளவர்கள் கூறும் ஆலோசனைகளை ஏற்பதற்குத் தயாராக வேண்டும். இலங்கையை மீட்பதற்கு சர்வதேச உதவி அவசியம்.

எனவே, சர்வதேச நன்கொடையாளர்கள் மாநாட்டை நடத்துமாறு கோருகின்றோம். இதற்குரிய நடவடிக்கை முன்னெடுக்கப்பட வேண்டும். இதற்கு எதிரணிகளும் ஒத்துழைப்பு வழங்கும்." – என்றார்.

# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்

259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## காத்திருக்கும் ஆபத்து

நாட்டின் தேசிய இனப் பிரச்சினையின் விளைவாக உருவெடுத்த மிக மோசமான உள்நாட்டு யுத்தம் முடிவடைந்து 16 ஆண்டுகள் கடந்துவிட்டன. ஆயினும், அது ஏற்படுத்திய பேரழிவு அனர்த்தங்களில் இருந்து நாடு முழுமையாக மீண்டும் விட்டது என்று கூற முடியாது. தொடர் விளைவுகளை நாடும் மக்களும் சமூகமும் இன்னமும் கூட எதிர்கொண்ட வண்ணம் தான் இருக்கின்றனர்.

அந்த யுத்தப் பேரழிவுகளுக்குப் பின்னர், அதன் மோசமான விளைவுகளை எதிர்கொண்ட வடக்கும் கிழக்கும் மழை, வெள்ளப் பேரிடர்கள் பலவற்றைச் சந்தித்து வந்திருந்தாலும் இப்போது ஏற்பட்டிருப்பது மிக ஆழமான, மோசமான பேரனர்த்தமாகும். தமிழர் தாயகமான வடக்கு, கிழக்கையும் கூட அது புரட்டிப் போட்டிருக்கின்றது என்று கூறுவது மிகையாகாது.

யுத்தத்தின் போது நாட்டில் புதைக்கப்பட்ட வெடிபொருள்களும் விதைக்கப்பட்ட மிதிவெடிகள், கண்ணிவெடிகள் போன்றவையும் இன்னமும் முழுமையாக மீட்கப்பட்டு விட்டன என்று கூறுவதற்கு இல்லை. இப்போது ஏற்பட்டுள்ள பெரு வெள்ளமும் அதன் தொடர் விளைவுகளும் மண்ணுக்குள் புதையுண்டு கிடந்த இந்த வெடிபொருள்களை மேலே கொண்டு வரும் ஆபத்து ஏது நிலையை ஏற்படுத்தி இருக்கின்றன.

அத்தகைய ஓர் அனுபவம் திருகோணமலையில் கிட்டியுள்ளது. திருகோணமலை மாவட்டம், கிண்ணியா பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கண்டல்காடு என்ற பகுதியில் புதைக்கப்பட்டிருந்த கைக்குண்டுகள் மற்றும் வெடிபொருள்கள் என்பன கண்டுபிடிக்கப்பட்டன என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர். வெள்ளத்தால் அடித்துச் செல்லப்பட்ட பகுதியில், தரையில் வெளிப்பட்டிருந்த பிளாஸ்டிக் கொள்கலன் மற்றும் பிளாஸ்டிக் பீப்பாயில் அவை கண்டுபிடிக்கப்பட்டன. இரண்டு கொள்கலன்களிலும் 109 கைக்குண்டுகள் மற்றும் எல்.எம்.ஜி. துப்பாக்கிகளுக்குப் பயன்படுத்தப்படுபவை என்று சந்தேகிக்கப்படும் 1,678 வெடிமருந்துகள் காணப்பட்டன எனப் பொலிஸார் கூறியுள்ளனர். வெள்ளத்தின் பின்னர் வெளிவந்த நிலையில், விசேட அதிரடிப்படையினர் உதவியுடன் இவை மீட்கப்பட்டுள்ளன.

மிக மோசமான போர் நடந்த இடங்கள், ஆயுத தரப்பினரின் முகாம்கள் அமைந்திருந்த பிரதேசங்கள் மற்றும் படை நடவடிக்கைகளுக்கும் நகர்வுகளுக்கும் முன்னர் வாய்ப்பிருந்த களங்கள் போன்ற பகுதிகளில் வெள்ளம் தரையைப் புரட்டிப் போட்டுள்ள நிலையில் இத்தகைய ஆபத்து தரும் வெடிபொருள்கள் வெளிப்படும் அச்ச நிலை காணப்படுகிறது.

மக்களும், அதிகாரிகளும், பிறர் தரப்புக்களும் கொஞ்சம் அசண்டையீனமாக - அசிரத்தையாக - இருந்துவிட்டால் இந்த பேரிடருக்கு மத்தியில் மற்றொரு பேரனர்த்தத்தைச் சந்திக்க வேண்டி நேர்ந்துவிடலாம்.

ஆகையினால் யுத்தப் பாதிப்புக்கு இலக்கான பிரதேசங்களில் மக்களும் அதிகாரிகளும் இவ்விடயத்தில் எப்போதும் மிகுந்த முன்னெச்சரிக்கையாகவும் உஷாராகவும் செயல்படுவது கட்டாயமாகும். காத்திருக்கும் இந்தப் பேராபத்துக் குறித்துப் போதிய விழிப்புணர்வை மக்கள் மத்தியில் விரைந்து ஏற்படுத்துவது கூட மிக அவசியமாகும்.

# நிந்தவூர் பிரதேச சபை தவிசாளர் தெரிவுக்கான கூட்டம் கோரமின்றி இன்றும் மீள ஒத்திவைப்பு




**(நூருல் ஹுதா உமர்)**

நிந்தவூர் பிரதேச சபையின் தவிசாளரை தெரிவு செய்வதற்கான அமர்வு மீண்டும் இன்று காலை கிழக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் ஏ.எல்.எம். அஸ்மி தலைமையில் இடம்பெற இருந்த நிலையில், கோரமின்மையால் சபை அமர்வை கூட்ட முடியாத நிலை ஏற்பட்டு தவிசாளர் தெரிவு பிறிதொரு தினத்திற்கு மீண்டும் இரண்டாவது தடவையாகவும் ஒத்திவைக்கப்பட்டது.

கடந்த இரு வாரங்களுக்கு முன்னர் இவ்வாறு ஒத்திவைக்கப்பட்ட தெரிவு இன்று காலை 10 மணிக்கு நடைபெறுவதாக கிழக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் ஏ.எல்.எம்.அஸ்மி விசேட வர்த்தமானி அறிவித்தல் மூலமும், உறுப்பினர்களுக்கு பதிவு தபாலினூடாக கடிதம் மூலமும் தெரிவித்திருந்தார்.

இருந்த போதும் இன்றைய அமர்வில் அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் கட்சியின் 06 உறுப்பினர்கள் மட்டுமே கலந்து கொண்டிருந்த நிலையில் சட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் கூடுதலாக 30 நிமிடங்கள் வழங்கப்பட்டும் வேறு உறுப்பினர்கள் யாரும் 10.30 மணிவரை சமுகமளிக்கவில்லை.

தவிசாளர் தெரிவை நடத்துவதற்கான சபை அமர்வுக்கான கோரம் 50 வீதம் என்பதால், 07 உறுப்பினர்கள் கலந்து கொள்ள வேண்டும். இதனால் 50 வீத கோரமின்றி புதிய தவிசாளரை தெரிவு செய்ய முடியாத நிலையில் இன்றைய சபை அமர்வும் ஒத்திவைக்கப்பட்டது.

நிந்தவூர் பிரதேச சபையில் அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தவிர, ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ், தேசிய மக்கள் சக்தி, ஐக்கிய மக்கள் சக்தி என்பனவும் தமது உறுப்பினர்களை கொண்டுள்ளன. இன்றைய அமர்வுக்கு ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் 04 உறுப்பினர்களும், தேசிய மக்கள் சக்தி இரு உறுப்பினர்களும், ஐக்கிய மக்கள் சக்தியைச் சேர்ந்த உப தவிசாளரும் சமுகம் அளிக்கவில்லை.

இன்றைய அமர்வில் அம்பாறை மாவட்ட உள்ளூராட்சி உதவி ஆணையாளர், அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் மாவட்ட குழுவினர், நிந்தவூர் பிரதேச சபை செயலாளர் அடங்கிய அதிகாரிகள் கலந்து கொண்டனர்.





# நுவரெலியாவில் குதிரைகளுக்கும் பேரிடர் நிவாரணம்

**(நுவரெலியா ஆர்.எவ்.எம்.சுஹேல்)**

நுவரெலியாவில் சுற்றுலாத் துறையின் வளர்ச்சிக்கு குறிப்பிடத்தக்க பங்களிப்பைச் செய்துள்ள குதிரைச் சவாரித் துறையின் குதிரைகளுக்கு இந்தப் பேரிடர் காலத்தில் ஏற்படக் கூடிய பாதிப்புகளினின்றும் அவற்றை மீட்பது மற்றும் நோய்களுக்கு சத்தான கால்நடை தீவனம், அத்தியாவசிய மருந்துகள் மற்றும் தடுப்பூசிகளை வழங்குவது தொடர்பான சிறப்பு மருத்துவ முகாம் இன்று நடைபெற்றது.

இது சம்பந்தமான திட்டத்தின் முதல் கட்டம் இன்று நுவரெலியா மாநகர சபையின் ஆதரவுடன் மேற்கொள்ளப் பட்டது. இந்தத் திட்டத்திற்கான ஒருங்கிணைப்பு மற்றும் பங்களிப்பு இலங்கை குதிரைச் சங்கத்தால் வழங்கப்பட்டது.

இந்த சேவைக்கு இலங்கை குதிரை சங்க உறுப்பினர்கள் மற்றும் விலங்குப் பிரியர்கள் ஏராளமானோர் நிதிப் பங்களிப்புகளை வழங்கியுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

பேரிடர் நிலைமை முடிந்து சுற்றுலாப் பயணிகள் நுவரெலியாவுக்குத் திரும்பும் வரை இந்த மருத்துவ சேவைகள் பல கட்டங்களாக வழங்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

நுவரெலியா நகர எல்லை முழுவதும் குதிரை சுற்றுப்பயணங்களுக்குப் பயன்படுத்தப்பட்ட 150க்கும் மேற்பட்ட பாதிக்கப்பட்ட குதிரைகளுக்கு இன்று சிகிச்சை அளிக்கப்பட்டது. அனைத்து விலங்குகளுக்கும் சத்தான விலங்கு உணவு, மருந்துகள் மற்றும் உபசரிப்புகள் 50 குதிரைவண்டிகளின் உரிமையாளர்களுக்கு விநியோகிக்கப்பட்டன.

இந்த வழியில் விநியோகிக்கப்படும் விலங்கு உணவு பத்து நாள்கள் முதல் இரண்டு வாரங்கள் வரை போதுமானவையல். மேலும் இது எதிர்காலத்தில் பல முறை விலங்கு உணவை விநியோகிக்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இயற்கை பேரழிவுகள் காரணமாக விலங்குகள் பாதிக்கப்பட்டால் பயன்படுத்த ஒரு தொகை மருந்து மற்றும் தடுப்பூசிகளும் குதிரைவண்டி உரிமையாளர்களுக்கு நன்கொடையாக வழங்கப்பட்டன.

அரசாங்கத்திடமிருந்தும் ஏதேனும் உதவி கிடைத்தால், எங்களால் முடிந்த அதிகபட்ச ஆற்றலைப் பயன்படுத்தி சுற்றுலாவை ஊக்குவிப்பதன் மூலம் பொருளாதாரத்தை வலுப்படுத்த பாடுபடுவோம் என்று அவர்கள் மேலும் தெரிவித்தனர்.

















# பாதிப்புற்றோருக்கு நடமாடும் வைத்திய முகாம் முருங்கன் ஆதார வைத்தியசாலை ஏற்பாட்டில்

**(மன்னார் நிருபர்)**

பேரிடர் காரணமாக பாதிக்கப்பட்டு நானாட்டான் பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள தற்காலிக நலன்புரி நிலையங்களில் தங்கியுள்ள மக்களின் நலனை கருத்தில் கொண்டு முருங்கன் ஆதார வைத்தியசாலையின் ஏற்பாட்டில் நடமாடும் வைத்திய சேவைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

முருங்கன் ஆதார வைத்தியசாலையின் வைத்திய அத்தியட்சகர் வைத்தியர் எம்.ஒஸ்மன் சார்ள்ஸ் தலைமையிலான குழுவினர் தொடர்ச்சியாக வைத்திய பரிசோதனைகள் முன்னெடுத்து வருகின்றனர்.

நாட்டில் ஏற்பட்ட வெள்ளம் காரணமாக மன்னார் மாவட்டத்தில் மன்னார், மாந்தை மேற்கு, மடு, நானாட்டான் மற்றும் முசலி ஆகிய ஐந்து பிரதேச செயலாளர் பிரிவுகளிலும் மக்கள் பாதிக்கப்பட்டனர். அவர்கள் பாடசாலைகள் மற்றும் பொது மண்டபங்களில் தங்க வைக்கப்பட்ட நிலையில் அந்த நலன் புரிநிலையங்களில் தங்கியுள்ள குழந்தைகள், சிறுவர்கள், பெண்கள்,கர்ப்பிணித் தாய்மார் மற்றும் வயோதிபர்கள் ஆகியோரின் நலனை கருத்தில் கொண்டு அவர்களுக்கான மருத்துவ சேவைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.















# வடக்குக் கடலில் மீண்டும் இந்திய இழுவைமடி படகுகள்!

**(பூ.லின்ரன்)**

அண்மைய புயல் காற்றிற்கு பின்னர் நேற்றிரவு அதிகளவான இந்திய இழுவைமடி படகுகள் வடமராட்சி கிழக்கு கட்டைக்காடு முதல் காங்கேசன்துறை வரை கடலிலிருந்து சுமார் இரண்டு கிலோமீட்டர் தூரம் வரை வந்து வடக்கு மீனவர்களின் வலைகளை வெட்டிவிட்டு சென்றன எனவும், சட்டவிரோத இழுவை மடி மீன்பிடியில் ஈடுபட்டன் என்றும் மீனவர்கள் தெரிவிக்கின்றனர்.

நேற்றிரவு கட்டைக்காடு கடற்பரப்பில் வடக்கு மீனவர்களுக்கும் இந்திய இழுவைமடி படகுகளுக்கும் இடையில் கடலில் முரண்பாடு ஏற்பட்டதாகவும் கடற்றொழிலிற்குச் சென்ற மீனவர்கள் காணொலி ஒன்றை அனுப்பிவைத்துள்ளனர்.

அண்மைய நாள்களில் ஏற்பட்ட கால நிலை மாற்றத்திற்கு பின்னர் இரண்டு நாள்களாக இலங்கைக் கடற் பரப்புக்குள் இந்திய இழுவைமடி படகுகளின் அத்துமீறிய வரவு மீண்டும் அதிகரித்துள்ளதாகவும் அவர்கள் தெரிவிக்கின்றனர்.



# வெள்ளத்தினால் காணாமல் போன குடாவட்டை வயல் வீதி

**( வி.ரி.சகாதேவராஜா)**

அண்மையில் ஏற்பட்ட தித்வா பேரிடர் வெள்ளத்தினால் அம்பாறை மாவட்டத்தில் பல வீதிகள் வெள்ளத்தினால் பாதிக்கப்பட்டன. சில வீதிகள் அள்ளுண்டன.

சம்மாந்துறை நாவிதன்வெளி பிரதேச வீரச்சோலை குடாவட்டை பிரதேச வயல் காணிகளுக்கான வீதிகள் வெகுவாக சேதமடைந்துள்ளன.

குறிப்பாக குடாவட்டை நடுக்கண்டத்தின் துருசுக்குச் செல்லும் வீதியைக் காணவில்லை. நீர்ப்பாசன திணைக்களம் அண்மையில் இவ் வீதியை செப்பனிட்டது. ஆனால் தற்போது அது முழுமையாகச் சேதமடைந்துள்ளது.

அதனால் விவசாயிகள் அவர்களது பாதிக்கப்பட்ட வயல் காணிகளுக்குச் செல்லக்கூட முடியவில்லை. வீதிப் போக்குவரத்து முற்றாகத் துண்டிக்கப்பட்டுள்ளது.

இவ் வீதி மண்ணைத் தவிர்த்து கிறவல் இட்டு போடப்படவேண்டும் என விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

கல்முனைப் பிராந்திய நீர்ப்பாசனத் திணைக்களம் இவ் வீதியை புனரமைத்து விவசாயத்திற்கு உதவ வேண்டும் எனவும் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.







# பேரிடர் பாதிப்புகளிலிருந்து மீளெழுச்சி பெறுவதற்கு பெரியநீலாவணையில் கார்த்திகை தீபப் பிரார்த்தனை

**( வி.ரி.சகாதேவராஜா)**

நாட்டில் இடம்பெற்ற அனர்த்த நிலைமைகளிலிருந்து மீள் எழுச்சி பெறவேண்டி, வடலூர் சமரச சுத்த சன்மார்க்க சத்திய சங்கம் இலங்கை கிளையின் ஏற்பாட்டில் பெரியநீலா வணை நெக்ஸ் ரெப் சமூக அமைப்பின் அனுசரணையுடன் அருட்பெரும் ஜோதி தீப பிரார்த்தனையும்,தியான மும் நேற்று நடைபெற்றது.

அத்துடன் அருட்பிரகாச வள்ளல் பெருமானின் ஜீவகாருண்ய நிகழ்வும், கார்த்திகை தீபம் ஏற்றி வழிபடுவதற் கான தீபங்களும் பெரியநீலாவணையில் வழங்கிவைக்கப்பட்டன.

கார்த்திகை தீப திருநாளில் அனை வரும் மாலை வேளையில் ஜோதி தீபங்களை ஏற்றி எமது நாட்டில் இடம்பெற்ற அனர்த்த இடர்பாடுகளி லிருந்து மக்கள் மீண்டு வரவேண்டி வழிபாடுகளிலும்,தியானத்திலும் ஈடுபட்டனர்.













# மட்டக்களப்பில் பல்வேறு இந்து ஆலயங்களிலும் விநாயகர் சஷ்டி விரதப்பூஜைகள் இன்று ஆரம்பம்

( வ.சக்திவேல்)

விநாயகர் விரதங்களுள் மிக முக்கியமான விரதமாக கொள்ளப்படும் விநாயகர் சஷ்டி விரதம் இன்று வெள்ளிக்கிழமை மட்டக்களப்பின் பல்வேறு இந்து ஆலயங்களில் ஆரம்பமாகியுள்ளது.

மட்டக்களப்பு, செட்டிபாளையம் சித்தி விநாயகர் ஆலயம், தேற்றாத்தீவு கொம்புச்சந்தி பிள்ளையார் ஆலயம், களுதாவளை சுயம்புலிங்கப் பிள்ளையார் ஆலயம் போன்ற பல ஆலயங்களில் பக்தி பூர்வமாக விநாயகர் சஷ்டி பூஜைகள் ஆரம்பமாகின.

ஆலயங்களில் இடம்பெற்ற பூர்வாங்க கிரியைகளை தொடர்ந்து, விசேட பூஜை வழிபாடுகள் இடம்பெற்று, விநாயகர் காப்புச்சாத்தும் நிகழ்வு நடைபெற்றது.

இவ்விரதம் கார்த்திகை மாதம் தேய் பிறை பிரதமை முதல், மார்கழி மாத வளர்பிறை சஷ்டி வரை நடைபெறும். விநாயகரின் அருள் வேண்டி பக்தர்கள், 21 நாள்கள் விரதமிருந்து வழிபடுகின்றமை சிறப்பம்சமாகும்.

இவ்விரதத்தை பிள்ளையார் பெருங்கதை விரதம், பிள்ளையார் கதை விரதம், பிள்ளையார் நோன்பு எனவும் அழைப்பர்,

மனித வாழ்வின் தடைகளை நீக்கி, சகல சௌபாக்கியங்களும் கிடைக்க விநாயகப் பெருமானை இந்துக்கள் வழிபாடு செய்து வருகின்றமை வழக்கமாகவுள்ளது.

இவ்விரதம் எதிர்வரும் 25 ஆம் திகதி தீர்த்தோற்சவத்துடன் நிறைவு பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.











# யாழில் அதிகரித்து வரும் வன்முறைகள்

**பவதாரணி குலேந்திரநாதன்**
**(ஊடகக்கற்கைகள் துறை,**
**யாழ்பாணப் பல்கலைக்கழகம்)**

“யாழ்ப்பாணம் – திருநெல்வேலியில் இளைஞர் ஒருவர் ஓட ஓட வெட்டிப்படுகொலை“ – என்று அண்மையில் வெளியான செய்தி, இங்கு இடம் பெறும் மோசமான சம்பவங்களில் ஒன்றை எடுத்துக் காட்டுகின்றது.

இவ்வாறான ஒரு கவலை அளிக்கும் நிலையேயிங்கு காணப்படுகின்றது.

யாழ்ப்பாணம், ஒரு காலத்தில் கல்வி, கலாசாரம், அமைதி, மற்றும் மக்களின் நட்புறவு, நற்பண்புகளுக்காக புகழ்பெற்ற ஒரு பிரதேசமாக இருந்தது.

ஆனால் அண்மைக்காலங்களில், அந்த அமைதியான நிலைமையை முற்றிலும் மாற்றும் விதமாக, பல்வேறு விதமான வன்முறைகள் அதிகரித்து வருகின்றன. இது யாழ் மாவட்ட மக்களின் பாதுகாப்புக்கும், சமூக சீர்திருத்தத்துக்கும் மிகப்பெரும் சவாலாக மாறியுள்ளது. குறிப்பாக பள்ளி மற்றும் கல்லூரி மாணவர்கள் வரையிலும் வன்முறைச் சம்பவங்கள் பெருகி வருகின்றன.

இத்தகைய வன்முறைச் செயற்பாடுகளுக்கான காரணங்களை நோக்குவது தவிர்க்க முடியாததாகின்றது.

வேலைவாய்ப்பு இல்லாமை:– இளைஞர்கள் தொழில் வாய்ப்பில்லாமல் இருப்பதனால், அவர்கள் தவறான பாதையில் செல்கின்றனர்.

கல்வி பற்றாக்குறை:– கல்வி ஒழுங்கு இல்லாதவர்களில் வன்முறை நடவடிக்கைகள் அதிகம் காணப்படுகிறது.

மனநலச் சிக்கல்கள் மற்றும் சமூக அழுத்தங்கள்:– குடும்பப் பிரச்சுனைகள் மற்றும் சமூக அழுத்தங்களால் மன அழுத்தத்தில் இருப்பவர்கள் வன்முறைகளைத் தேர்வுசெய்கிறார்கள்.

மாத்திரை மற்றும் போதைப்பொருள் பயன்பாடு:– இது வன்முறைக்கான முக்கிய காரணங்களில் ஒன்றாக உள்ளது.

சமூக ஊடகங்கள் மற்றும் சினிமா:– வன்முறைகளை ஊக்குவிக்கும் வீடியோக்கள் மற்றும் செய்திகளை சமூக ஊடகங்கள், சினிமா போன்றவை விரைவாக பரப்புவதும் தூண்டுவதும் ஒரு காரணமாக உள்ளது.

இவ்வாறான வன்முறை செயல்களால் பொது மக்களுக்குப் பயமும், பீதியும், பாதுகாப்புக் குறைவும், பதற்றச் சூழலும் ஏற்படுகின்றன், சமூக ஒற்றுமை குலைக்கப்படுகிறது, மாணவர்களின் கல்வி பாதிக்கப்படுகிறது, யாழ்ப்பாணத்தின் நல்ல பெயர் மங்குகிறது.

இவ்வன்முறைச் செயற்பாடுகளை குறைப்பதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். அவையாவன:–

- காவல்துறைக் கண்காணிப்பு அதிகரிக்கப்பட வேண்டும்.
- இளைஞர்களுக்கு வழிகாட்டும் வகையில் சமூக சேவைக் கட்டமைப்புகள் அமைக்கப்பட வேண்டும்.
- மாவட்ட அரசும், சமூக அமைப்புகளும் இணைந்து விழிப்புணர்வு நிகழ்ச்சிகளை நடத்த வேண்டும்.
- போதைப்பொருள் தடுப்பு நடவடிக்கைகள் தீவிரமாக மேற்கொள்ளப்பட வேண்டும்.
- வன்முறைகளில் ஈடுபடுபவர்களுக்கு சட்டப்படி கடுமையான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

யாழ்ப்பாணம் ஓர் இனிய, அமைதியான நிலமாக மீண்டும் மாற வேண்டும் என்றால், இப்போது அதிகரித்து வரும் வன்முறைகளை முற்றிலும் கட்டுப்படுத்த வேண்டியது அவசியம்.

இதற்கு, காவல்துறை, கல்வி அமைப்புகள், பெற்றோர், சமூகத் தலைவர்கள் மற்றும் நாங்கள் அனைவரும் ஒருங்கிணைந்து செயல்பட வேண்டும்.

வன்முறையற்ற யாழ்ப்பாணம் – நமக்குக் கட்டாயம் தேவை!



# மன்னாரில் கால்நடைகளுக்கு சிகிச்சையும் பண்ணையாளர்களுக்கு ஆலோசனையும்

**(பா.சதீசன்)**

அண்மையில் ஏற்பட்ட இயற்கை அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட மன்னார் மாவட்டத்தின் மாந்தை மேற்கு, நானாட்டான்,மடு பிரிவுகளின் கால்நடைகளுக்கு சிகிச்சையளிக்கும் விதமாக வடக்கு மாகாண அரச கால்நடை வைத்தியர்களின் யாழ் மற்றும் கிளிநொச்சி மாவட்டங்களைச் சேர்ந்த சேர்ந்த இரண்டு விசேட அணிகள் மாந்தை மேற்கு மற்றும் நானாட்டான் அரச கால்நடை வைத்தியர்களுடன் இணைந்து நேற்று மாகாணப் பணிப்பாளர் டாக்டர் வசீகரனின் பணிப்புரைக்கு அமைய களமிறங்கியிருந்தனர்.

இதன் போது மேற்படி பிரிவுகளில் விடுமுறை நாள் என்றும் பாராது பண்ணையாளர்களின் துயர் துடைக்கும் விதமாக பாதிக்கப்பட்ட 400 ற்கு மேற்பட்ட கால்நடைகளுக்கு சிகிச்சையளித்தனர். பாதிக்கப்பட்ட பண்ணையாளர்களுக்கு ஆலோசனைகளையும் வழங்கியிருந்தனர்.அத்துடன் கால்நடை உற்பத்தி சுகாதார திணைக்களத்தின் மூலம் கணிசமான உயிர்காப்பு மருந்துகளும் அவர்களுக்கு வழங்கப் பட்டன்.

மேலும், இறந்த கால்நடைகளுக்குரிய பதிவுகளையும் அடுத்த கட்ட நடவடிக்கைகளுக்கான வழிகாட்டுதல்களும் வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. மேற்படி சிகிச்சை முகாமுக்குரிய அனுசரணைகளை வடக்கு மாகாண கால்நடை உற்பத்தி சுகாதார திணைக்களத்துடன் வடக்கு மாகாண அரச கால்நடை வைத்திய அதிகாரிகள் சங்கமும் வழங்கியிருந்தது.











# புலிபாய்ந்தகல்லில் சுற்றுலா ஒதுக்கிடத்தில் சட்டவிரோத முறையில் மீன்வாடி அமைப்பு!

## சட்ட நடவடிக்கை மேற்கொள்ள வலியுறுத்துகின்றார் ரவிகரன் எம்.பி.

**(விஜயரத்தினம் சரவணன்)**

முல்லைத்தீவு – கொக்குத்தொடுவாய் புலிபாய்ந்தகல் சுற்றுலா ஒதுக்கிடத்தில் பெரும்பான்மை இன மீனவர்கள் சிலர் சட்டவிரோதமான முறையில் மீனவ வாடி அமைத்துள்ளமையுடன், கடற்கரையில் சட்டவிரோதமாக படகுகளையும் நிறுத்தியுள்ளனர்.

இந்நிலையில் வன்னிமாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் நிலமைகளை நேரில் சென்று பார்வையிட்டார். இத்தகைய சட்டவிரோத செயற்பாடுகளுக்கெதிராக உரிய சட்ட நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு உரிய தரப்பினரிடம் அவர் வலியுறுத்தியுள்ளார்.

முல்லைத்தீவு – கரைதுறைப்பற்று பிரதேசசெயலாளர் பிரிவிற்குட்பட்ட கொக்குத்தொடுவாய், புலிபாய்ந்தகல்லில் சுற்றுலாத் யளத்திற்கென ஒதுக்கப்பட்ட பகுதியில் பெரும்பான்மையின மீனவர்கள் சிலர் அத்துமீறி சட்டவிரோதமான முறையில் வாடி அமைக்கும் செயற்பாட்டில் ஈடுபட்டுள்ளதனர். சட்டவிரோதமான முறையில் கடற்கரையில் படகுகளும் நிறுத்திவைக்கப்பட்டுள்ளன.

இது துரைராசா ரவிகரனுக்குக் கிடைத்த முறைப்பாட்டையடுத்து, அவர் அந்த இடத்திற்குச் நேரடியாகச் சென்று நிலமைகளை ஆராய்ந்தார்.

இதன்போது புலிபாய்ந்தககல்லில் சுற்றுலாத் தளத்திற்கென ஒதுக்கப்பட்டுள்ள கடற்கரையை அண்டிய காட்டுப் பகுதியில் சட்டவிரோதமாக பெரும்பான்மையின மீனவர்கள் சிலரால் மறைவான வகையில் வாடி அமைக்கப்பட்டிருப்பது கண்டறியப்பட்டுள்ளது.

அத்தோடு OFFRP-A-0742MLT, OFFRP-A-1000MLT, OFFRP-A-0974 MLTஆகியமுல்லைத்தீவுமாவட்டத்தின்பதிவிலக்கங்களைக்கொண்ட மூன்று படகுகளும், OFFRP-A-5017NBO, OFFRP-A-4478NBO ஆகிய நீர்கொழும்பு மாவட்டத்தின் பதிவிலக்கங்களையுடைய இரு படகுகளும், OFFRP-A-5491CHW, OFFRP-A-7209 CHW ஆகிய சிலாபம் மாவட்டத்தின் பதிவிலக்கங்களைக் கொண்ட இரு படகுகளுமாக மொத்தம் ஏழு படகுகள் சட்டவிரோதமானவகையில் புலிபாய்ந்தகல் கடற்கரையில் பெரும்பான்மை இன மீனவர்கள் சிலரால் நிறுத்திவைக்கப்பட்டிருப்பதையும் காணமுடிந்துள்ளது.

இந்நிலையில் நாடாளுமன்ற உறுப்பினர் உடனடியாக அந்தொ பகுதிக்குரிய கிராம அலுவலர் மற்றும் கரைதுறைப்பற்று பிரதேசசெயலக காணி உத்தியோகத்தர் உள்ளிட்டவர்களுக்கு இந்த விடயங்களைத் தெரியப்படுத்தியமையை அடுத்து அந்தப் பகுதிக்கு அவர்களும் உடனடியாக வருகை தந்திருந்தனர்.

இந்த சட்டவிரோத நடவடிக்கைகளுக்கு எதிராக உரிய நடவடிக்கை எடுக்குமாறு நாடாளுமன்ற உறுப்பினர் வலியுறுத்தியிருந்தார்.

கரைதுறைப்பற்று பாரதேசசெயலாளரிடமும் தெரியப்படுத்தப்பட்ட நிலையில் அவரும் இதுகுறித்து உரிய நடவடிக்கைகளை மேற்கொள்வார் எனத் தெரிவித்துள்ளார்.

அதேவேளை முல்லைத்தீவு மாவட்ட செயலாளர் அருளானந்தம் உமாமகேஸ்வரனையும் நேரடியாகச் சந்தித்து இந்த சட்டவிரோத செயற்பாடுகள் தொடர்பில் தெரியப்படுத்தினார் ரவிகரன்.

இந்த சுற்றுலா ஒதுக்கிடத்தில் இதற்கு முன்னரும் பலதடவைகள் பெரும்பான்மை இன மீனவர்கள் சிலர் இவ்வாறான சட்டவிரோத செயற்பாடுகளில் ஈடுபட்டிருந்த நிலையில் அச்செயற்பாடுகள் நாடாளுமன்ற உறுப்பினர் ரவிகரனினது தலையீட்டை அடுத்து, உரிய சட்டநடவடிக்கைகள் ஊடாகத் தடுத்து நிறுத்தப்பட்டிருந்தன என்பது குறிப்பிடத்தக்கது.





### திருப்பரங்குன்றம் விவகாரம்:

# மாநிலங்களவையில் இருந்து தி.மு.க. எம்.பிக்கள் வெளிநடப்பு



திருப்பரங்குன்றம் விவகாரம் குறித்து விவாதிக்க வலியுறுத்தி மாநிலங்களவையில் எதிர்க்கட்சி எம்.பிக்கள் முழக்கம் எழுப்பிய நிலையில், தி.மு.க. எம்.பிக்கள் வெளிநடப்பு செய்துள்ளனர்.

திருப்பரங்குன்ற விவகாரம் தமிழகம் மட்டுமன்றி, நாடாளுமன்றம் வரை தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது. நீதிபதி ஜி.ஆர்.சுவாமிநாதனை பதவியில் இருந்து நீக்க வேண்டும் என அரசியல் கட்சி தலைவர்கள் கூறி வரும் நிலையில், திருப்பரங்குன்ற மலையில் தீபம் ஏற்றும் விவகாரத்தில் ‘தமிழகத்தில் மத நல்லிணக்கத்தை சீர்குலைக்க மதவாத சக்திகள் முயற்சி’ என ஒரு தரப்பினரும், ‘இந்துக்களுக்கு விரோதமாக செயல்படும் தி.மு.க. அரசு’ என்று இன்னொரு தரப்பினரும் கருத்துகளை முன்வைத்து வருகின்றனர்.

இந்நிலையில், திருப்பரங்குன்றம் விவகாரம் தொடர்பாக நாடாளுமன்றத்தில் விவாதம் நடத்தக்கோரி தி.மு.க. எம்..பிக்கள் சார்பில் ஒத்திவைப்பு தீர்மானம் 'நோட்டீஸ்' அளிக்கப்பட்டது. தி.மு.கவின் மக்களவை குழு தலைவர் டி.ஆர்.பாலு மற்றும் மாநிலங்களவை குழு தலைவர் திருச்சி சிவா ஆகியோர் ஒத்திவைப்பு தீர்மானம் .நோட்டீஸ். வழங்கினார்.

இதேபோல் காங்கிரஸ் எம்.பி. மாணிக்கம் தாகூரும் ஒத்திவைப்பு தீர்மான நோட்டீஸ் வழங்கினார். இந்நிலையில், இரு அவைகளிலும் திருப்பரங்குன்றம் விவகாரம் தொடர்பாக தி.மு.க. மற்றும் கூட்டணி கட்சி எம்.பிக்கள் தொடர் கோஷம் எழுப்பினர்.

ஆனால், திருப்பரங்குன்றம் விவகாரத்தில் ஒத்திவைப்பு நோட்டீஸை ஏற்க முடியாது என மாநிலங்களவை தலைவர் சி.பி.ராதாகிருஷ்ணன் மறுத்ததால், தி.மு.க. உள்ளிட்ட கூட்டணிக் கட்சி எம்.பி.,க்கள் வெளிநடப்பு செய்தனர்.

மேலும், திருப்பரங்குன்ற விவகாரம் தொடர்பாக மக்களவையில் விவாதிக்க வேண்டும் என தி.மு.க. கூட்டணி கட்சி எம்.பிக்கள் கோரிக்கை வைத்த நிலையில், சபாநாயகர் ஓம் பிர்லா அதை மறுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# டில்லியில் காற்று மாசை தடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்

### சோனியா வலியுறுத்தல்



டில்லியில் காற்று மாசுபாட்டை கட்டுப்படுத்த அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று காங்கிரஸ் மூத்த தலைவர் சோனியா காந்தி வலியுறுத்தியுள்ளார்.

டில்லி காற்று மாசுபாடு பிரச்சினை தொடர்பாக நாடாளுமன்ற வளாகத்தில் பல்வேறு எதிர்க்கட்சிகளின் தலைவர்கள் நேற்று போராட்டத்தில் ஈடுபட்டனர். பிரதமர் வெறும் அறிக்கை வெளியிடுவதை தவிர்க்க வேண்டும், இந்த விவகாரத்தில் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என அவர்கள் வலியுறுத்தினர். பிரச்சினையின் தீவிரத்தை எடுத்துக்காட்டும் வகையில் சில எம்.பி.க்கள் முகக்கவசம் அணிந்திருந்தனர்.

போராட்டத்தை தொடர்ந்து, காங்கிரஸ் நாடாளுமன்ற கட்சியின் தலைவர் சோனியா காந்தி கூறுகையில்,

“டில்லியில் காற்று மாசுபாடு மிக மோசம் அடைந்துள்ளது. அதை கட்டுப்படுத்த உரிய நடவடிக்கை எடுப்பது அரசின் பொறுப்பாகும். இந்தப் பிரச்சினையால் குழந்தைகளும் முதியவர்களும் மிகவும் பாதிக்கப்பட்டுள்ளனர்.” என்றார்.

காங்கிரஸ் பொதுச் செயலாளர் பிரியங்கா காந்தி வதேரா கூறுகையில்,

“காற்று மாசுபாடு அரசியல் விவகாரம் அல்ல. அரசு உறுதியான நடவடிக்கை எடுக்க வேண்டும். அதற்கு நாங்கள் உறுதுணையாக இருப்போம்.” என்றார்.

காங்கிரஸ் தேசிய தலைவர் மல்லிகார்ஜுன கார்கே உள்ளிட்ட பலர் போராட்டத்தில் பங்கேற்றனர்.

# அத்தியாவசிய பொருள்கள் மீது சுகாதார, செஸ் வரி விதிக்கப்படாது

### நிர்மலா சீதாராமன் தகவல்



அத்தியாவசியப் பொருள்கள் மீது தேசிய பாதுகாப்பு செஸ் வரி விதிக்கப்படாது என்று நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் விளக்கம் தெரிவித்துள்ளார்.

மக்களவையில் விவாதத்துக்காக சுகாதாரப் பாதுகாப்பு மற்றும் தேசிய பாதுகாப்பு செஸ் வரி சட்டமூலத்தை அறிமுகப்படுத்தி நிதியமைச்சர் உரையாற்றுகையில்,

“சுகாதாரம், தேசிய பாதுகாப்பு வரி மக்கள் அன்றாடம் பயன்படுத்தும் அத்தியாவசிய பொருள்களின் மீது விதிக்கப்படாது. மாறாக பான் மசாலா போன்ற உடலுக்கு தீங்கு விளைவிக்கக்கூடிய பொருள்களின் மீது இந்த வரி விதிக்கப்படும்.

இந்த செஸ் வரியை விதிப்பதன் மூலம் நாட்டில் பான் மாசலா நுகர்வை பெருமளவு தடுக்க முடியும் என்பதே எங்களின் எதிர்பார்ப்பு. இந்த வரி விதிப்பால் கிடைக்கும் வருவாயிலிருந்து குறிப்பிட்ட சில சுகாதார திட்டங்களின் கீழ் மாநிலங்களுக்கு நிதி பகிர்ந்தளிக்கப்படும். குறிப்பாக, பான் மசாலா மீது விதிக்கப்படும் வருவாயிலிருந்து கிடைக்கும் ஒரு பகுதி சுகாதார விழிப்புணர்வு, பிற சுகாதாரம் தொடர்பான திட்டங்கள் மற்றும் செயல்பாடுகள் மூலம் மாநிலங்களுடன் பகிர்ந்து கொள்ளப்படும்.” என்று தெரிவித்தார்.




# புடினுக்கு இந்திய குடியரசுத் தலைவர் மாளிகையில் இராணுவ அணிவகுப்புடன் சிவப்பு கம்பள வரவேற்பு

இந்தியாவுக்கு விஜயம் செய்துள்ள ரஷ்ய அதிபர் விளாடிமிர் புதினுக்கு குடியரசுத் தலைவர் மாளிகையில், இராணுவ அணிவகுப்புடன் சிவப்புக் கம்பள வரவேற்பு அளிக்கப்பட்டுள்ளது.

குடியரசுத் தலைவர் மாளிகை வந்த புடினை, குடியரசுத் தலைவர் திரவுபதி முர்மு மற்றும் பிரதமர் மோடி உள்ளிட்டோர் வரவேற்றனர்.

இரண்டு நாள்கள் விஜயமாக நேற்று இந்தியா வந்த ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடின், இன்று காலை குடியரசுத் தலைவர் மாளிகைக்கு வருகை தந்தார். அவரை, குடியரசுத் தலைவர் திரவுபதி முர்மு மற்றும் பிரதமர் மோடி ஆகியோர் வரவேற்றனர்.

இதையடுத்து, புடினுக்கு சிவப்புக் கம்பள வரவேற்புடன் இராணுவ அணிவகுப்பு மரியாதை அளிக்கப்பட்டது. இராணுவ இசைக் கலைஞர்களின் இசையுடன் கூடிய இராணுவ அணிவகுப்பை புடின் பார்வையிட்டார். இதையடுத்து, இந்திய வெளியுறவு அமைச்சர் ஜெய்சங்கர் உள்ளிட்ட அமைச்சர்கள் மற்றும் உயர் அதிகாரிகளை திரவுபதி முர்மு, புடினுக்கு அறிமுகப்படுத்தி வைத்தார்.

இதன் தொடர்ச்சியாக புடினுடன் வருகை தந்துள்ள அந்நாட்டின் தூதுக் குழுவினரை புடின், திரவுபதி முர்முவுக்கு அறிமுகப்படுத்தி வைத்தார். அவர்கள் ஒவ்வொருவரிடமும் கைகளை குலுக்கி, திரவுபதி முர்மு வரவேற்றார்.

இந்த நிகழ்ச்சியை அடுத்து, மகாத்மா காந்தி நினைவிடத்தில் ஜனாதிபதி புடின் அஞ்சலி செலுத்துகிறார். இதன் பிறகு டில்லியில் உள்ள ஹைதராபாத் இல்லத்தில் பிரதமர் நரேந்திர மோடியும் ஜனாதிபதி புடினும் அதிகாரப்பூர்வமாக பேச்சுவார்த்தை நடத்துகின்றனர். இதன்போது பாதுகாப்பு, அணு சக்தி, தொழில்நுட்பம், வர்த்தகம், விண்வெளி உள்ளிட்ட துறைகள் தொடர்பாக இரு நாடுகள் இடையே 25 ஒப்பந்தங்கள் கையெழுத்தாகும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

கடந்த 2000 ஆம் ஆண்டில் முதலாவது இந்திய, ரஷ்ய வருடாந்திர உச்சி மாநாடு டில்லியில் நடைபெற்றது. இந்த வரிசையில் 22 ஆவது உச்சி மாநாடு கடந்த ஆண்டு ஜூலையில் ரஷ்ய தலைநகர் மாஸ்கோவில் நடைபெற்றது.




# புடினை நான் சந்தித்து பேசுவதை மத்திய அரசு விரும்பவில்லை

## ராகுல் காந்தி குற்றச்சாட்டு



ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடினை, நான் சந்தித்து பேசுவதை மத்திய அரசு விரும்பவில்லை என்று ராகுல் காந்தி குற்றம் சாட்டி உள்ளார்.

ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புதின் நேற்று டில்லி சென்றார். இது தொடர்பாக மக்களவை எதிர்க்கட்சி தலைவர் ராகுல் காந்தி நேற்று செய்தியாளர்களிடம் கருத்து தெரிவிக்கையில்,

" வெளிநாட்டு தலைவர்கள் இந்தியாவுக்கு வருகை தரும்போது எதிர்க்கட்சி தலைவரை சந்தித்துப் பேசுவது மரபு ஆகும். முன்னாள் பிரதமர்கள் வாஜ்பாய், மன்மோகன் சிங் ஆட்சிக் காலத்தில் இந்த மரபு கண்டிப்புடன் பின்பற்றப்பட்டது.

ஆனால் பிரதமர் நரேந்திர மோடி தலைமையிலான தற்போதைய மத்திய அரசு மரபை மாற்றி உள்ளது. தற்போது வெளிநாட்டு தலைவர்கள் இந்தியாவுக்கு வரும்போது எதிர்க்கட்சி தலைவரை சந்திக்காமல் செல்கின்றனர். நான் வெளிநாடு செல்லும் போது கூட, அந்த நாடுகளின் தலைவர்கள் என்னை சந்திக்க வேண்டாம் என்று மத்திய அரசு தரப்பில் அறிவுறுத்தப்படுகிறது.

தற்போது ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடினை, நான் சந்தித்து பேசுவதை மத்திய அரசு விரும்பவில்லை. இது மத்திய வெளியுறவுத் துறையின் எதிர்மறை சிந்தனையை வெளிப்படுத்துகிறது.

ஆளும் கட்சிக்கும் எதிர்க்கட்சிக்கும் இடையே கருத்து வேறுபாடுகள் இருக்கலாம். ஆனால் எதிர்க்கட்சி தலைவரும் இந்தியாவின் பிரதிநிதி என்பதை மத்திய அரசு மறந்து விடக்கூடாது." என்று தெரிவித்தார்.

இதே விவகாரம் குறித்து காங்கிரஸ் பொதுச்செயலாளர் பிரியங்கா காந்தி கூறும்போது,

"வெளிநாடுகளின் தலைவர்கள், இந்தியாவுக்கு வருகை தரும்போது மக்களவை எதிர்க்கட்சித் தலைவரை சந்திப்பது மரபு ஆகும். இந்த மரபை மத்திய அரசு உடைத்திருக்கிறது. ஜனநாயக மரபுகளை காக்க வேண்டியது மத்திய அரசின் கடமை ஆகும்." என்று தெரிவித்தார்.

கனடா முரசு
வெள்ளிக்கிழமை 05/12/2025

## கனடாவில் குழந்தைகளுக்கு காய்ச்சல் பரவுகை அதிகரிப்பு



இந்த ஆண்டில் வழக்கத்தை விட முன்கூட்டியே காய்ச்சல் பரவத் தொடங்கியதால், கனடா முழுவதும் மருத்துவமனைகள் குழந்தைக 02▶



# அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட இலங்கைக்கு ஒரு மில்லியன் டொலர்களை வழங்கும் கனடா

## கனேடிய தமிழர் பேரவை வரவேற்பு

இயற்கை அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட இலங்கைக்கு உதவிக்கரம் நீட்டும் வகையில், கனடா அரசாங்கம் ஆரம்பகட்டமாக 1 மில்லியன் கனேடிய டொலர் அவசர மனிதாபிமான உதவியை அறிவித்துள்ளது.

இந்த உதவி, பாதிக்கப்பட்ட சமூகங்களுக்கு தற்காலிக தங்குமிடம், குடிநீர், சுகாதார சேவைகள் மற்றும் அத்தியாவசிய நிவாரணப் பொருள்களை வழங்கு வதற்காக நம்பகமான சர்வதேச அமைப்புகள் மூலம் வழங்கப்படும்.

மேலும், இது உலக உணவுத் திட்டம் மூலமாக முன்பே வழங்கப்பட்ட உதவியின் தொடர்ச்சியாகும்.

இந்நிலையில் கனடிய அரசி இந்த உதவியை கனேடிய தமிழர் பேரவை வரவேற்று, கனடா அரசாங்கத்திற்கு நன்றியை தெரிவித்துள்ளது. 02▶

# ஐஸ் போதைப்பொருள் கடத்திய கனேடியருக்கு 16 ஆண்டுகள் சிறை

அவுஸ்திரேலியாவுக்குள் போதைப் பொருள் கடத்திய கனடா பிரஜைக்கு 16 ஆண்டுகள் சிறை தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

2012 முதல் 2013 ஆம் ஆண்டுவரை சர்வதேச போதைப்பொருள் கடத்தல் வலையமைப்பின் முக்கிய புள்ளியாகக் கருதப்படும் 62 வயது நபரொருவருக்கே மெல்பேர்ன் நீதிமன்றத்தால் இவ்வாறு சிறை தண்டனை விதிக்கப்பட்டது.

போதைப்பொருள் கடத்தல் பற்றிய விசாரணை வேட்டைக்காக அவுஸ்திரேலிய பெடரல் பொலிஸார் 2012 இல் விசாரணைக்குழுவை அமைத்திருந்தனர்.

நிறுவனமொன்றின் ஊடாக மேற்படி நபர் அவுஸ்திரேலியாவுக்குள் பெருமளவு ஐஸ் போதைப்பொருளை கடத்தியுள்ளார். 2013 ஆம் ஆண்டு இவர் கைது செய்யப்பட்ட நிலையில் அது தொடர்பான வழக்கு விசாரணையிலேயே அவருக்கு சிறை தண்டனை விதிக்கப்பட்டது.





# அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்பை சந்திக்கின்றார் பிரதமர் கார்னி

கனடா பிரதமர் மார்க் கார்னி மற்றும் அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் ஆகியோர் வொஷிங்டனில் உள்ள கெனெடி மையத்தில் குறுகிய சந்திப்பை நடத்த உள்ளனர் என்று பிரதமர் அலுவலகம் தெரிவித்துள்ளது.

அதேவேளை, மார்க் கார்னி, மெக்சிக்கோ ஜனாதிபதி கிளௌடியா ஷெய்ன்பாமையும் தனிப்பட்ட முறையில் சந்திக்க உள்ளார். ஷெய்ன்பாம், அமெரிக்க ஜனாதிபதியையும் தனியாகச் சந்திக்க உள்ளார் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

மூன்று தலைவர்களும், 2026 உதைபந்து உலகக் கோப்பைக்கான சீட்டிலுப்பு நிகழ்வில் பங்கேற்க வொஷிங்டனுக்கு சென்றுள்ளனர்.

இந்த சீட்டிழுப்பு, போட்டி எந்த நாடுகளில் எவ்வாறு பிரிக்கப்படும் என்பதை தீர்மானிக்கும் முக்கிய நிகழ்வாகும். சில நாள்களுக்கு முன்பு, இந்த நிகழ்வில் அமெரிக்க ஜனாதிபதியை காணலாம் என பிரதமர் கார்னி கூறியிருந்தார்.ஆனால் அப்போது சந்திப்பு குறித்து அதிகாரப்பூர்வ அறிவிப்பு எதுவும் வெளிவரவில்லை.

தற்போது, கனடா - அமெரிக்கா இடையே வரி தொடர்பான வர்த்தக மோதல் நீடித்து வருகிறது.

இந்த முரண்பாட்டை முடிவுக்கு கொண்டு வர நடைபெற்ற பேச்சுவார்த்தைகள், கடந்த ஒக்டோபரில் திடீரென நிறுத்தப்பட்டன.

ஒன்டாரியோ மாகாண அரசு தயாரித்த ஒரு விளம்பரம் தொடர்பில் ட்ரம்ப் அதிருப்தி தெரிவித்ததால் பேச்சுவார்த்தை நிறுத்தப்பட்டது.

பிரதமர் கார்னி அதற்காக மன்னிப்பு தெரிவித்து, வெள்ளை மாளிகை பேச்சுவார்த்தை மேசைக்கு திரும்பும் பொழுதே கனடா பேச தயாராக இருப்பதாக தெரிவித்துள்ளார்.

---

## அனர்த்தத்தால்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இது குறித்து கனேடிய தமிழர் பேரவை வெளியிட்டுள்ள அறிக்கையில்,

இலங்கையில் வெள்ளத்தால் கடுமையாக பாதிக்கப்பட்ட சமூகங்களுக்கு இந்த 1 மில்லியன் கனேடிய டொலர் உதவி உடனடி நிவாரணத்தை வழங்கும். குறிப்பாக வடக்கு, கிழக்கு மற்றும் மலையகப் பகுதிகள் போரும் வறுமையும் காரணமாக நீண்டகாலமாக பாதிக்கப்பட்ட பகுதிகள் இந்த வெள்ளத்தால் மிக அதிக சேதத்தைச் சந்தித்துள்ளன.

இந்த பகுதிகளுக்கு தாமதமின்றி உதவிகள் சென்றடைய வேண்டும் என்பதையும், அவசர நிவாரண நடவடிக்கைகள் முன்னுரிமையாக மேற்கொள்ளப்பட வேண்டும் என்பதையும் கனேடிய தமிழர் பேரவை வலியுறுத்தியுள்ளது.

இது ஒரு முக்கிய முதலிட உதவி என்றாலும், பேரழிவின் பரவலான தாக்கம் காரணமாக வரவிருக்கும் வாரங்களிலும் மாதங்களிலும் கூடுதல் நிதி மற்றும் ஆதரவு அவசியம் எனவும் கனேடிய தமிழர் பேரவை தெரிவித்துள்ளது. கனேடிய தமிழர் பேரவை பிரதிநிதிகள் அண்மையில் கனடா நாடாளுமன்ற உறுப்பினர்களை சந்தித்து, இலங்கைக்கான அவசர உதவியை வழங்குமாறு வேண்டுகோள் விடுத்திருந்தனர்.

இந்த முயற்சிக்கு சாதகமான பதில் அளித்த நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு கனேடிய தமிழர் பேரவை தனது மனமார்ந்த நன்றியை தெரிவித்துள்ளது. அவர்கள் முன்னெடுத்த பங்கு இந்த உதவி அறிவிப்பை ஏற்படுத்துவதில் முக்கியமானதாக அமைந்ததாக பேரவை குறிப்பிட்டுள்ளது.

இந்த நிதி உண்மையிலேயே அதிக அவசரத்துக்கு உள்ளான மக்களுக்கு சென்றடைவதை உறுதி செய்வதற்காக, மேலும் நிலைமையின் முன்னேற்றத்திற்கு ஏற்ப தேவையான உதவிகளை பெற்றுத் தருவதற்காக, கனேடிய தமிழர் பேரவை, கனடா அரசு, இலங்கை உள்ளூர் நிர்வாகங்கள் மற்றும் சமூக அமைப்புகளுடன் நெருக்கமாக இணைந்து செயல்படத் தயாராக உள்ளது.

கனடா அரசு நிலைமையை நெருக்கமாக கவனிக்கின்றதையும், தேவைகள் அதிகரிக்கும் பட்சத்தில் கூடுதல் ஆதரவையும் வழங்கத் தயாராக உள்ளதாகவும் தெரிவித்துள்ளது.

இலங்கையில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான இந்த முடிவு, சர்வதேச சமூகத்தின் தொடர்ந்த ஒற்றுமையின் சான்றாகக் கருதப்படுகிறது." என குறிப்பிட்டுள்ளது.

---

## கனடாவில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ளில் காய்ச்சல் தொற்றுகளின் அதிகரிப்பை சந்தித்து வருகின்றன.

கடந்த ஆண்டு நவம்பர் மாதத்தில் 17 குழந்தைகள் மட்டுமே காய்ச்சல் வைரஸிற்கு உள்ளாகியிருந்த இருந்த நிலையில், இந்த ஆண்டு அதே மாதத்தில் 145 குழந்தைகள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இது எட்டு மடங்கு அதிகரிப்பு என கிழக்கு ஒன்டாரியோ குழந்தைகள் மருத்துவமனை வெளியிட்ட தரவுகளில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

மேலும், கடந்த ஆண்டு நவம்பர் மாதத்துடன் ஒப்பிடுகையில், இந்த ஆண்டு காய்ச்சல் காரணமாக மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட குழந்தைகளின் எண்ணிக்கை இரட்டிப்பாகி 12 ஆக உயர்ந்துள்ளது.

மருத்துவர்கள் பாதுகாப்பு உருவாக இரண்டு வாரங்கள் ஆகும் என்பதால் உடனடியாக காய்ச்சல் தடுப்பூசி எடுக்குமாறு மக்களிடம் வலியுறுத்துகின்றனர்.

பிற குழந்தைகளுடன் தொடர்ந்து தொடர்பில் இருப்பதால் பாடசாலை வயதுடைய குழந்தைகளே முதலில் பாதிக்கப்படுவார்கள் என்றாலும், இரண்டாண்டுகளுக்கு குறைவான குழந்தைகள் மற்றும் முன் நோய்கள் கொண்டவர்கள் அதிக ஆபத்தில் உள்ளனர் என அறிவுறுத்தப்பட்டுள்ளது.

மூத்த வயதினர், குறிப்பாக 75 வயதுக்கு மேற்பட்டவர்களும் தீவிர நோய்க்கு உள்ளாகும் அபாயம் காரணமாக கூடுதல் கவனம் தேவைப்படும் என எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.




# மிசிசாகாவில் துப்பாக்கிச் சூடு: ஒருவர் வைத்தியசாலையில்

கனடாவின் மிசிசாகாவில் இடம்பெற்ற துப்பாக்கிச்சூட்டில் ஒருவர் காயமடைந்த நிலையில், வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இந்த சம்பவம் டெர்ரி சாலை மற்றும் கார்டிஃப் புல்வர்ட் பகுதியில் இடம்பெற்றதாக பொலிஸார் தெரிவித்தனர். துப்பாக்கிச் சூட்டில் ஆண் ஒருவருக்கு உயிருக்கு ஆபத்தான காயங்கள் ஏற்பட்டன என தெரிவிக்கப்பட்டுள்ளது.

சம்பவத்துக்குப் பிறகு சந்தேக நபர் வாகனத்தில் தப்பிச் சென்றுள்ளார்.

எனினும், அந்த வாகனம் மற்றும் சந்தேக நபரைப் பற்றிய விவரங்கள் இதுவரை வெளியிடப்படவில்லை.

இந்த சம்பவத்துக்கான மேலதிக விசாரணைகள் நடைபெற்று வருகின்றன.

